இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

பார்வையற்றிருந்தவரை யூதர்கள் இரண்டாம் முறையாகக் கூப்பிட்டு அவரிடம், “உண்மையைச் சொல்லிக் கடவுளை மாட்சிப்படுத்து. இம்மனிதன் ஒரு பாவி என்பது எங்களுக்குத் தெரியும்” என்றனர். பார்வை பெற்றவர் மறுமொழியாக, “அவர் பாவியா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஒன்று மட்டும் எனக்குத் தெரியும்: நான் பார்வையற்றவனாய் இருந்தேன்; இப்போது பார்வை பெற்றுள்ளேன்” என்றார். (யோவான் 9:24-25)

# நற்செய்தி அறிவித்தல் என்பது வாழ்வால் சான்றுபகர்தல்!



வத்திக்கான்: அலட்சியம் அல்ல, ஒற்றுமையுடனான உலகமயமாக்கல் இவ்வுலகிற்கு தேவை என்றும், நற்செய்தியை அறிவித்தல் என்பது, நமக்காகக் காத்திருக்கும், இரக்கமுள்ள கடவுளுக்கு நம் வாழ்வால் சான்றுபகர்வதாகும் என்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த மார்ச் 4 சனிக்கிழமையன்று இத்தாலிய தொலைக்காட்சியான RAIஇன் SUA IMMAGGINE அதாவது அவரது உருவில் என்னும் நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களை வத்திக்கானின் கொன்சிஸ்தோரோ அறையில் சந்தித்து மகிழ்ந்த போது மேற்கண்டவாறு கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

RAI தொலைக்காட்சி மற்றும் இத்தாலிய ஆயர் பேரவையின் ஒத்துழைப்பில் உருவாகி ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கும் SUA IMMAGINE என்னும் நிகழ்ச்சி வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தின் வளாகத்தில் நடக்கும் மூவேளை செப உரையுடன் இணைந்து செல்வதாகவும், வெளியே மக்களைப் பார்ப்பதற்கு முன்பு, சில நிமிடங்கள் அந்நிகழ்ச்சியைத் தான் தொடர்ந்து பார்ப்பதாகவும் தெரிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.



இத்தாலிய தொலைக்காட்சியான RAIஇன் SUA IMMAGGINE என்னும் நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் திருத்தந்தை

கூட்டத்தில் பங்கேற்றோர் இருபத்தி ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, "அவரது உருவில் என்று இந்நிகழ்ச்சிக்கான பெயரைத் தேர்ந்தெடுத்தவரை தான் வாழ்த்த விரும்புவதாகக் கூறிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், “மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். என்ற விவிலியத்தின் இறைவார்த்தையின் அடிப்படையில் அத்தலைப்பு தேர்ந்தெடுக்கப்பட்டதை எடுத்துரைத்தார். நாம் கடவுளின் "சாயலில், உருவில்" படைக்கப்பட்டுள்ளோம் என்பதை மறக்கக் கூடாது என்றும், கடவுள் ஒவ்வொரு மனிதரிடமும் தனது ஒளியின் தீப்பொறியை தனிப்பட்ட முறையில் பற்றவைத்துள்ளார் என்றும் கூறிய திருத்தந்தை, அவரது உருவில் என்ற ஒளிபரப்பு தன் தலைப்பின் வழியாக ஒரு தனித்துவமான உறவைப் பற்றி பேசுகிறது என்றும் பாராட்டினார்.

காற்றில் உள்ள வார்த்தைகளாகவோ, திரையில் எழுதப்பட்டதாகவோ இவ்வார்த்தைகள் மாறிவிடாது, அவருடைய சாயலில், உருவில் உருவாக்கப்பட்ட கடவுளின் குழந்தைகள் நாம் என்ற விழிப்புணர்வை இழந்து வருந்தும் பலருக்கு அதைத் தொடர்ந்து சுட்டிக்காட்ட வேண்டும் புத்துயிர் பெற வைக்கவேண்டும் என்றும் வலியுறுத்தினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நற்செய்தி அறிவிப்புப்பாதையில் தொடர்ந்து பயணிக்க அவ்வல்லுனர்களை ஊக்குவித்த திருத்தந்தை, அலட்சியம் அல்ல, ஒற்றுமையுடனான உலகமயமாக்கல் இவ்வுலகிற்கு தேவை என்றும், நற்செய்தியை அறிவித்தல் என்பது, நமக்காகவும், நமக்கு முன்னும் பின்னும் நம்மைப் பாதுகாக்கவும், நம்மை விரும்புகின்ற, அன்பு செய்கின்ற இரக்கமுள்ள கடவுள் இருக்கிறார் என்பதற்கு நம் வாழ்வால் சான்றுபகர்வதாகும் என்றும் எடுத்துரைத்தார். வாழ்வால் சான்றுபகர்வதே நற்செய்திக்கு சிறந்த மார்க்கம்.

*மெரினா ராஜ் - வத்திக்கான்*

# புனித கனோசா மக்தலின் 250-வது பிறப்பு விழா புனித பிரகாசியார் பங்கில் கொண்டாடப்பட்டது

**குளுவாங்:** மலேசியாவின் கனோசியன் அருட்சகோதரிகள், கனோசாவின் புனித மக்தலினின் 250வது பிறந்தநாளை மார்ச் 3 அன்று கொண்டாடினர். புனித மக்தலின் மார்ச் 1, 1774 இல் பிறந்தவர். எனவே, அருட்சகோதரிகள் இக்கொண்டாட்டத்தைக் குளுவாங்கில் அவர்களின் பேரவை கூட்டத்தை முடித்துக் கொண்டாட முடிவெடுத்தனர்

கனோசியன் அருட்சகோதரிகள் அருள்தந்தையர்களுடனும், பொதுநிலையினருடனும் இப்பிறந்தநாளைக் கொண்டாட விரும்பினர். "உங்கள் வாழ்க்கையை ஒளிரச் செய்யுங்கள்: ‘கனோசா மக்தலின் 250 ஆண்டுகள்-அன்பு மற்றும் சுதந்திரத்தின் கொடை" என்ற மையக்கருத்தை வலியுறுத்தும் கொண்டாட்டமாக இது அமைந்தது. இந்த முழக்கத்திற்கு இணங்க, சகோதரிகள், மெழுகுவர்த்திகளை ஏற்றிக் கொண்டு, பேரவை மண்டபத்திற்குள் நுழையும் முன், புனித பிரகாசியார் பங்கின் பங்குத்தந்தை Msgr பீட்டர் இங் அவர்களால் சிறப்பு திருப்பலி கொண்டாடப்பட்டது. அருட்சகோதரிகள் நற்கருணை கொண்டாட்டம் தொடங்குவதற்கு முன்பு தங்கள் மெழுகுவர்த்திகளைப் புனித மக்தலின் சுரூபத்திற்கு அருகில் வைத்தனர்.

திருப்பலியின் போது, அருட்சகோதரிகள், மரியாதையின், ஒற்றுமையின் அடையாளமாக, புனித மக்தலின் திருப்பண்டத்தின் முன் தங்கள் பதக்கங்களைச் சார்த்தினர். இன்று திருஅவை மற்றும் உலகத்தின் சேவையில் இச்சபையின் அருட்சகோதரிகள் விளங்குவதற்கான அறத்தின் கொடைக்காக இறைவனுக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு மறக்கமுடியாத நிகழ்வாக இக்கொண்டாட்டம் அமைந்தது என்றால் மிகையாகாது.



கனோசாவின் புனித மக்தலின்

“உன் நம்பிக்கை எல்லாவற்றையும் இறைவனிடம் போட்டுவிடு. அப்போது நீ எவை எல்லாம் இழந்துவிட்டதாக நினைக்கின்றாயோ அவை அனைத்தையும் அவரில் கண்டுபிடிப்பாய்”

*புனித கனோசா மக்தலின்.*



கனோசாவின் புனித மக்தலின் பிறந்த நாள் விழாவிற்கு ஒன்றுகூடிய அருட்சகோதிகள்

## ‘மீண்டும் பள்ளிக்குத் திரும்புவோம்’ ரவாங்கில் வசதி குறைந்த மாணவர்களுக்கு உதவி

ரவாங்: இங்குள்ள புனித யூதா ததேயு பங்கின் முழுமனித வளர்ச்சி பணிக் குழுவின் ஏற்பாட்டில், கடந்த மார்ச் 4-ம் திகதியன்று, ‘மீண்டும் பள்ளிக்குத் திரும்புவோம்’ திட்டத்தின் கீழ் பள்ளிப் பொருட்களை வாங்குவதற்காக 40 மாணவர்களும் அவர்களது பெற்றோரும் அருகிலுள்ள ‘Pakaian Hari-Hari” கடைக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

அங்கு மாணவர்களுக்கு இரு ஜோடி பள்ளி சீருடை, காலணி மற்றும் காலுறை வாங்கித்தரப்பட்டது. இதற்கு முன்பதாக, ஆலயத்தில் ஒன்றுகூடிய வேளையில் புத்தகப் பையும் பண அன்பளிப்பும் இவர்களுக்கு SP Care Clinic ஏற்பாட்டில் வழங்கப்பட்டது. SP Care Clinic நிறுவனர் மற்றும் சமூக சேவையாளர் டாக்டர் சத்திய பிரகாஷ் நடராஜன் அவர்கள் ஆண்டுதோறும் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது. இச்சேவைக்கு நன்றி கூறிய போது, “எனக்கு நன்றி சொல்லாதீர்கள், என்னை ஆசீர்வதித்த இறைவனுக்கு நன்றி கூறுங்கள் என்று ராவாங்கில் பிறந்தவருமான டாக்டர் சத்தியா பதிலளித்தார்.

மேலும் பல உலு சிலாங்கூர் நகராட்சி உறுப்பினர்களும் அன்று மாணவர்களுடன் இணைந்து நிகழ்ச்சிக்கு சிறப்பு செய்தனர். மற்றும் எதிர்காலத்தில் வசதியற்றவர்களுக்காக ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சிகளில் பங்கின் முழுமனித வளர்ச்சி பணிக் குழுவிற்கு (PIHDM) உதவ சம்மதித்தார்.

நன்கொடையாளரும் முன்னாள் ஆசிரியருமான கரேன் கூ அவர்களும் மாணவர்களுடன் அன்றைய பொழுதைக் கழித்தார், அத்தோடு, பங்குத்தந்தை வின்சென்ட் தோமஸ் அவர்களும் இந்நிகழ்வுக்காக பெரும் நன்கொடைகளைத் திரட்டி உதவினார்.




தொடர்ந்து, , Kajang, Rumah Keluarga Kami மையத்தின் சுமார் 30 மாணவர்களுக்கும் பள்ளி சீருடைகள், காலணிகள் மற்றும் காலுறைகள் வாங்க உதவுவதற்காக PIHDM க்கு நன்கொடை அளித்த நன்கொடையாளர்களுக்கு தலைவர் அகஸ்டின் ரத்னசாமி அவர்கள் நன்றி தெரிவித்தார்.

## உள்மனத்தெளிவைப் பயிற்சிக்கும் காலம் தவக்காலம்

**உள்மனத்தெளிவை பயிற்சிக்கும் இத்தவக்காலத்தில், இறைவார்த்தை செபத்தில் நம்மை நிலைநிறுத்துவதன் வழியாக, அடிமைப்படுத்தும் அலகைக்கு எதிரான போராட்டத்தில் இருந்து விடுபட்டு, உள்மன சுதந்திரத்திரத்திற்கான போராட்டம் நமக்குள் நடைபெற சாதகமான வாய்ப்பு உள்ளது.**

**திருத்தந்தை பிரான்சிஸ்**

## கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது

‘கோலாலம்பூர்: கோலாலம்பூர் மாமறைமாவட்ட மேய்ப்புப்பணி மையம், மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான அடிப்படைப் பயிற்சி டாக்டர். ஸ்டீபன் செல்வராஜ் மற்றும் அருட்சகோதரி ரீத்தா சவரியண்ணன் ஆகியோரின் தலைமையில் கடந்த வருடம் இயங்கலை வாயிலாக நடத்தப்பட்டு வந்தது. இதில் பல பங்குகளிலுமிருந்து பல ஆசிரியர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அதன் தொடர் பயிற்சியாக, இவ்வருடம் தொடக்கம் நேர்முகமாக நடத்த திட்டமிட்டு முதல் பயிற்சி, கடந்த பிப்பிரவரி மாதம் 25, 26ஆம் திகதிகளில் மேற்கண்ட மையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியை “மறைக்கல்வி திறன் பயிற்சிப் பட்டறை” எனும் தலைப்பில், சகோதரி மாணிக்கம் சின்னப்பன் வழிநடத்தினார். இதன் மிக முக்கிய அம்சமாக “மலேசிய மறைக்கல்வி நூல் வரிசைத் தொடர்” எனும் தலைப்பில் கருத்துரை வழங்கிய அவர், இந்நூல் வரிசை உருவாக கருத்தில் கொள்ளப்பட்ட அனைத்து விடயங்களையும் தெளிவுற பகிர்ந்துகொண்டார்.

இப்பயிற்சியின்போது சகோதரி கொடுத்த விளக்கங்கள், பல கேள்விகளுக்கு தெளிவான விளக்கமாக இருந்ததோடு, இவ்விளக்கங்கள் மற்ற மறைக்கல்வி ஆசிரியர்களும் சென்றடைவது சிறப்பு என உணரப்பட்டது.



கிறிஸ்து எவ்வாறு சீடர்களுக்கும், மக்களுக்கும் புரியும்படி எளிமையாக இறையரசு பற்றிய சிந்தனைகளைத் தெளிவுபடுத்தினாரோ, அவ்வாறே மறைக்கல்வி ஆசிரியர்களும் மாணவர்களுக்கு எளிய முறையில் கற்பிக்க வேண்டும் என்பது இப்பட்டறையில் தெளிவுப்படுத்தப்பட்டது. மேலும், மறைக்கல்வி என்பது பாடங்களைக் கற்பிப்பதோடு நின்றுவிடாமல், இறைவேண்டல் கலந்த போதனையாகவும் இருக்க வேண்டும் என்பதும் நினைவுறுத்தப்பட்டது. நிறைவாக, விவிலியத்தில் சொல்லப்பட்டது



போல “இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்” (1 தெச 5:17), “நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது நம்பிக்கையுடன் கேட்பதை எல்லாம் பெற்றுக் கொள்வீர்கள்” (மத் 21:22) போன்ற இறை வசனங்களுக்கேற்ப இறை அனுபவம், இறை ஆற்றல் ஆகியவற்றை இறைவேண்டல் வழியாக எவ்வாறு பெறவேண்டும் என்பதையும், காலை, “திருப்புகழ்மாலை” எப்படி செபிப்பது போன்ற நடைமுறை பயிற்சிகளை மாணவர்கள் மத்தியில் எவ்வாறு இலகுவாகக் கொண்டு சேர்ப்பது போன்ற விளக்கங்களும் பயிற்சிக்குச் சிறப்பு சேர்த்தது.



*-குணசீலன் கோலின், சிரம்பான்.*

**கவனத்தில் கொள்வோம்!**

**குருத்து ஞாயிறு -ஏப்ரல் 2**

**பெரிய வெள்ளி-ஏப்ரல் 7**

**பாஸ்கா ஞாயிறு -ஏப்ரல் 9**

## உலகின் ஒளியாம் கிறிஸ்து நம்மை ஒளிர்விக்கிறார்!

தவக்காலத்தின் நான்காம் ஞாயிறான இன்று நாம் “லாத்ரெடே” அதாவது மகிழ்ச்சியின் ஞாயிறு என்றும் அழைக்கப்படுகிறத. ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பின் நாளை நாம் நெருங்கிவிட்டோம் என்னும் எதிர்நோக்கை இது உணர்த்துகிறது. ஒவ்வொரு ஆண்டும் தவக்காலம் வந்துகொண்டு தான் இருக்கிறது. நாமும் பல தவமுயற்சிகளையும், ஒறுத்தல்களையும் கடைப்பிடித்தாலும், அவை எந்த அளவுக்கு நம்மை சென்ற ஆண்டைவிட இன்னும் அதிகமாக கடவுளோடு நெருக்கமாகக் கொண்டு வந்துள்ளது என்று நாம் சற்று சிந்திப்போம்.

இன்றைய முதல் வாசகத்தில் சாமுவேலுக்கு ஆண்டவர் கொடுக்கும் ஓர் அரியப் பணி இளைஞனாய் இருந்த தாவீதை அரசனாக திருப்பொழிவு செய்யவேண்டியதாகும். சவுலின் தவறுகளால் ஆண்டவர் சவுலைப் புறந்தள்ளி, தாவீதை அரசனாகத் தயார் செய்கிறார். கடவுள் ஆள் பாரத்து செயல்படுவதில்லை. மாறாக, அவர் அகத்தைப் பார்க்கிறார். தாவீதை அவர் எவ்வளவு அன்புசெய்தார் என்றால், தாவீதின் வழிமரபில் தம் ஒரே மகனைப் பிறக்கத் திருவுளமானார். ஆடுமேய்க்கும் தாவீதை மக்களைப் பேணிக்காக்கும் ஆயனாக அரசனாகத் திருநிலைப்படுத்தினார்.

இன்றைய பதிலுரைப்பாடலும் இதை இன்னும் ஆழமாக எடுத்துரைக்கின்றது. தாவீது கடவுள் அவருக்குத் தந்த மாபெரும் கொடைக்காக இந்தப் பாடலைப் பாடுகின்றார். ஆடுகளை மேய்க்கும் ஆயனாக இருந்த அவருக்கு கடவுள் ஆயனாக இருந்து குறைவின்றி அவரை வழிநடத்துவதை இவ்வாறு எடுத்துரைகின்றார். ஓர் ஆயன் எவ்வாறு தன் ஆடுகளைப் பேணிக்காக்கின்றார் என்பதை அனுபவப்பூர்வமாக எடுத்துரைக்கின்றார். ஆடுகளுக்குத் தேவையான அனைத்தையும், பசும்புல்லையும் நீர்நிலைகளையும் பாதுகாப்பையும் வழங்குவதாகப் பாடுகிறார். ஆயனுக்குத் தானே ஆடுகளைப் பற்றித் தெரியும். கடவுள் அவரின் ஆயனாக இருப்பதை இவர் உணர்ந்துப் பாடுகிறார்.

இரண்டாவது வாசகத்தில், பவுல் அடிகளாரும், எபேசின் மக்கள் ஒளியின் மக்களாக வாழவேண்டும் என்று அறிவுறுத்துகிறார். நாம் செய்யும் ஒவ்வொரு செயலின் மூலம் நாம் பிறருக்கு ஒளியாகத் திகழமுடியும். பல்வேறு தேவைகளில் இருப்போரின் குறைகளை நாம் சரிசெய்யும் போது நாம் தான் ஒளியின் மக்களாகிறோம்.

இன்றைய நற்செய்தியில் பிறவியிலேயே பார்வையற்ற ஒருவருக்கு இயேசு பார்வை என்னும் ஒளியைத் தருகிறார். சீலோவாம் என்னும் அனுப்பப்பட்டவரின் குளத்தில் கண்களைக் கழுவியதால் அவர் ஒளியைப் பெற்றார். அனைத்திற்கும் மேலாக, பார்வைபெற்றவர் பரிசேயரிடம் கூறிய வார்த்தைகளை நாம் சிந்தித்துப் பார்ப்போம். மானிடமகனில் நம்பிக்கைக் கொண்ட அந்தப் பார்வைபெற்றவர் கடவுளிடமிருந்து வராதவர் என்றால் இவரால் எதுவும் செய்திருக்க இயலாது என்று கற்று அறிந்த பரிசேயர்களிடமே வாதிடுகிறார்.

நாமும் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தோமெனில், புறப்பார்வை பெற்றவர்களாக மட்டுமல்லாமல், அகப்பார்வை பெற்றவர்களாகவும் இருப்போம். இதற்கு ஆண்டவரின் அருள் வேண்டி மன்றாடுவோம்.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்*

**தவக்காலத்தின் 4-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | சாமு: 16: 1b8-7, 10-13 |
| தி. பாடல் | 23: 1-3a. 3b-4. 5. 6 ◌ |
| வாசகம்: | எபேசியர்: 5: 8-14 |
| நற்செய்தி: | யோவான்: 9: 1-41 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 4**